**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.73/2017**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29-ம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 29.02.2024 | கணவர் பெயர்: | ஆறுமுகசாமி |
| பெயர்: | ஆவுடைதாய்<br>(PW-1 Chief ) | வயது : | 70/2024 |
| கிராமம்: | சீர்காழி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 29.02.2024.</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

02.02.1976-ம் தேதியிட்ட எனது பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1986 முதல் 2017 வரை செலுத்திய வீட்டு வரி ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது** (எண்ணிக்கை-7) தாவா சொத்திற்கு உள்ள வீட்டிற்கு 2015 மற்றும் 2017 மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது** (எண்ணிக்கை-2)

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.